விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 188 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 11 சனிக்கிழமை (25.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் விசேட செயற்றிட்டம்

### யாழில் நீதியமைச்சர் விஜயதாஸ



(யாழ்ப்பாணம்)

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் சில செயற்றிட்டங்களை தாம் யாழில் தங்கியுள்ள சில நாட்களில் விசேடமாக கவனம் செலுத்தி முன்னெடுக்கவுள்ளதாக 15

என்னை மன்னித்து விடுங்கள்

## எரிபொருள் கப்பல் வர மேலும் தாமதமாகும்

### எரிசக்தி அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)

இலங்கை வரவுள்ள 40 ஆயிரம் மெட்ரிக்தொன் பெற்றோலுடனான கப்பல் 15

யாழ்.மாவட்டத்தில்

## எரிபொருள் பங்கீட்டு அட்டை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எதிர்வரும் வாரத்திலிருந்து பங்கீட்டு அடிப்படையில் எரிபொருள்ள விநியோகிப்பதற்காக அமுல்படுத்தப்படவுள்ள பொதுமக்களுக்கான எரிபொருள் பங்கீட்டு அட்டை பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது. 15

கடினமான சந்தர்ப்பத்தில்

# இலங்கையை கைவிடமாட்டோம்

### ஜனாதிபதியிடம் ஐரோப்பிய நாட்டுத் தூதுவர்கள் உறுதி



(கொழும்பு)

*ஐரோப்பிய பிராந்திய நாடுகளை இலங்கையின் நண்பர்களாகக் கருதுங்கள். இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கையை கைவிடாது தொடர்ந்து ஆதரவளிப்போம் என ஐரோப்பிய பிராந்திய நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதி கோட்டாவிடம் உறுதியளித்துள்ளனர்.* *(15ஆம் பக்கம் பார்க்க)*

யாழ்.ஊரெழு பகுதியில்

## இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழுப் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் 15

யாழ்.நகர்ப் பகுதியில்

## மின்சாரம் தாக்கியதில்

இளம் குடும்பஸ்தர் பலி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தில் மின்சாரம் தாக்கியதில் இரண்டு பிள்ளைகளின் 16

## நிபந்தனைகளுடன் இலங்கைக்கு உதவ எதிர்பார்க்கின்றோம்

### சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் ஜனாதிபதி கோட்டாவிடம் தெரிவிப்பு



(கொழும்பு)

நிபந்தனைகளுடன் இலங்கைக்கு உதவ எதிர்பார்க்கின்றோம் என சர்வதேச நாணய நிதியப் பிரதி 15

மானிப்பாயில்

## 600 லீற்றர் டீசலுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

600 லீற்றர் டீசலை பதுக்கி 15

இலங்கையின் பொருளாதார நிலைமை

## மனித உரிமை நிலைவரத்தின் முன்னேற்றத்தை திசை திருப்பக்கூடாது

### பிரித்தானிய இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமை நிலைவரத்தின் முன்னேற்றத்தை சவாலான பொருளாதார நிலைமை திசைதிருப்பக்கூடாது என்று பிரிட்டனின் பொதுநலவாய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் விக்கிபோர்ட் 15

## காங்கேசன்துறையில் வீட்டில் தனிமையில் வசித்த மூதாட்டி

### கழுத்தறுத்துப் படுகொலை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் வீட்டில் தனிமையில் வசித்த மூதாட்டி ஒருவர் கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை கொல்லங்கலட்டியைச் சேர்ந்த சாணை தவமணி (வயது-78) என்ற மூதாட்டியே இவ்வாறு நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த மூதாட்டி அணிந்திருந்த தங்க 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்மிக்க பெரேரா
## அமைச்சராக பதவியேற்பு



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா அமைச்சராக பதவியேற்றுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் அவர் நேற்று பதவியேற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவர் தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக பதவியேற்றுள்ளார். (ம-7)

## காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து
# சரக்கு படகுச் சேவைக்கு
# பாதுகாப்பு அமைச்சு அனுமதி
### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

தமிழ்நாட்டின் பாண்டிச்சேரி, காரைக்கால் போன்ற துறைமுகங்களுக்கும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கும் இடையிலான சரக்கு படகுச் சேவை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கூடிய விரைவில் சரக்கு படகுச் சேவை ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

குறித்த படகுச் சேவை மூலம் தேவையான மண்ணெண்ணெய், டீசல் போன்ற எரிபொருட்களையும், உரம், பால்மா, மருந்துப் பொருட்கள் உட்பட்ட அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் தேவையானளவு எடுத்துவர முடியும் என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த படகுச் சேவையை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க முயற்சிகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றார்.

அதேவேளை, பலாலி - திருச்சி, சென்னை இடையிலான விமான சேவையையும் திட்டமிட்டபடி ஜூலை 1 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# அநுராதபுரத்தில் எரிபொருள் வரிசையில் காத்திருந்த
## 19 வயது இளைஞன் விபத்தில் பலி

அநுராதபுரம்-பண்டுலுகம எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வரிசையில் காத்திருந்த இளைஞர் ஒருவர் நேற்று காலை இடம்பெற்ற வாகனவிபத்தில்உயிரிழந்துள்ளார்.

கனரக வாகனம் ஒன்று மோதியதில் குறித்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புத்தேகம பகுதியை சேர்ந்த 19 வயதான இளைஞரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞர் அநுராதபுரம் - புத்தளம் வீதியின் இடதுபுறத்தில் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## பொருளாதார பிரச்சினையைத் தீர்க்க
# அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும்
# பிரதமர் ரணில் கோரிக்கை



(கொழும்பு)

நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கு, அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் விசேட அறிக்கையை வெளியிட்ட பிரதமர் குறித்த அறிக்கையில் இதனை தெரிவித்தார்.

குறித்த அறிக்கையில், நாடு முழுவதும் எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடியைச் சமாளிக்க நாட்டு பிரஜை ஒவ்வொருவரும் ஒன்றுபட வேண்டும், அரசியல்வாதிகள் மற்றும் மக்களிடம் இருந்து அர்ப்பணிப்பை எதிர்பார்த்துள்ளோம்.

அவ்வாறு காணப்பட்டால் மட்டுமே உலக நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வரும். அத்துடன் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் நாம் உறுதியாக உள்ளோம் என்பதை அரசியல்வாதிகளும், ஒட்டுமொத்த மக்களும் உலகுக்கு நிரூபிக்க வேண்டும்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார பின்னடைவுக்கு மத்தியில், அரசாங்கம் உறுதியான பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்தினால் மட்டுமே புதிய தேர்தலை நடத்த முடியும்.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டவுடன் பொருத்தமான 225 பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்வதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும், அவர்களை தெரிவு செய்யும் பொறுப்பும் அதிகாரமும் பொதுமக்களுக்கு உள்ளது என பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# யாழில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தாக்கப்பட்ட இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்ற கைகலப்பில் காயமடைந்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

உடுவில் செப்பாலை கோவிலடியைச் சேர்ந்த செல்வரத்தினம் பிரசாந் (வயது-23) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு உயிரிழந்த இளைஞனும் அவரது நண்பரும் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு சென்று இருந்தனர்.

அதன்போது, குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முறைகேடுகள் இடம்பெறுவதாக தெரிவித்து இருவரும் அவற்றை தமது கையடக்க தொலைபேசியில் காணொளி எடுத்தபோது, எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்தவர்களுடன் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

முரண்பாடு முற்றிய நிலையில் இரு இளைஞர்கள் மீதும் தலைக்கவசம் உள்ளிட்டவற்றால் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் இருவரும் காயமடைந்துள்ளனர்.

பின்னர் அங்கிருந்தவர்கள் அவர்களை தாக்குதலாளிகளிடம் இருந்து காப்பாற்றி அங்கிருந்து அனுப்பி வைத்திருந்தனர்.

மற்றுநாள் திங்கட்கிழமை தாக்குதலுக்கு இலக்கான இளைஞர்களில் ஒருவர் நெஞ்சு வலி என யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சென்றுள்ளார்.

வைத்தியசாலையில் அவரை விடுதியில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்நிலையில் புதன்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இளைஞனின் உயிரிழப்பு தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த இளைஞன் மாரடைப்பு காரணமாகவே உயிரிழந்துள்ளார் என யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் தனது மரண விசாரணையில் தெரிவித்துள்ளார். (ம-7,33)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**வேதாத்திரிய மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகாசனப் பயிற்சிகள் ஆரம்பம்**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டு இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- ❋ உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
- ❋ உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
- ❋ மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
- ❋ அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
- ❋ உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :- 25.06.2022 சனிக்கிழமை தொடக்கம் 01.07.2022 வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை

பயிற்சிகளை வழங்குபவர்கள்:- துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் மற்றும் துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

(C-4540)

தொடர்புகளுக்கு:- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்

இல.31, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.

தொ.இல:- 021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309



# கண்ணீர் அஞ்சலி




எமது பாடசாலை ஆசிரியர்

திரு செ.பன்னீர்ச்செல்வம்

அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் செந்திவேல் பொன்னி**

அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மனிதாபிமான அவசரநிலை

## ஐ.நா. மனிதாபிமான ஒருங்கிணைப்பு அலுவலகம் எச்சரிக்கை

**(ஜெனிவா)**

**இலங்கை முழுமையான மனிதாபிமான அவசரநிலையை எதிர்கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விடயங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.**

இலங்கையில் தற்போது 200 இற்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துகள் கையிருப்பில் இல்லை என்றும், அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களில் மேலும் 163 மருந்துகளுக்கு பற்றாக்குறை ஏற்படும் என்றும் ஐக்கிய நாடுகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

2,700 க்கும் மேற்பட்ட அத்தியாவசிய அறுவை சிகிச்சை மற்றும் 250 இற்கும் மேற்பட்ட வழக்கமான ஆய்வக பொருட்களும் கையிருப்பில் இல்லை.

மின்சார விநியோக தடை மற்றும் மின்பிறப்பாக்கிகளை இயக்க எரிபொருள் பற்றாக் குறை காரணமாக, பல மருத்துவமனைகள் அவசரமற்ற அறுவை சிகிச்சைகள் மற்றும் நடைமுறைகளை ஒத்தி வைக்க வேண்டியேற்பட்டுள்ளது.

இந்தநிலையில், இலங்கையில் நிலவும் பொருளாதாரக் குழப்பம் முழு மனிதாபிமான அவசரநிலையாக மாறக்கூடும் என்று ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விடயங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது. (நி-6)

## 45 இலட்சம் பேர் தொழிலை இழக்கும் அபாயம்
## ஏற்றுமதி அபிவிருத்தி சபை எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்காலத்தில், சிறு மற்றும் மத்தியதர கைத்தொழிலாளர்கள் உட்பட 45 இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு அற்றுப் போகும் அபாய நிலை உள்ளதாக, ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் லலந்த வதுதுர தெரிவித்துள்ளார்.

சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்கள், நிர்மாணம், விவசாயம் ஆகிய துறைகளின் தொழில்வாய்ப்புகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இன்னும் தீவிர நெருக்கடி நிலை ஏற்படவில்லை. தற்போது பெற்றோல், டீசல், எரிவாயு என்பவற்றுக்கான நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

தொழில் வாய்ப்புகள் இல்லாது போனால் அதனை தடுப்பதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் லலந்த வதுதுர தெரிவித்துள்ளார். (நி-6)

## ஜூலை 6 ஆம் திகதி வரை
## எரிவாயுவிற்கு காத்திருக்க வேண்டாம்
### லிட்ரோ நிறுவனம் கோரிக்கை

(கொழும்பு)

ஜூலை 6 ஆம் திகதி வரை சமையல் எரிவாயு கொள்கலன்களை கொள்வனவு செய்வதற்காக வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என லிட்ரோ நிறுவனம் பொது மக்களை கோரியுள்ளது

எதிர்வரும் ஜூலை 5 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இரண்டு கப்பல்களின் 7, 000 மெற்றிக் தொன் எரிவாயு நாட்டை வந்தடையவுள்ளது.

அந்த கப்பல்களில் உள்ள எரிவாயு கிடைக்கும் வரை கையிருப்பில் குறைந்தளவேனும் எரிவாயு இல்லை என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அடுத்த மாதம் 10 ஆம் திகதியின் பின்னர், 25,000 மெற்றிக் தொன் எரிவாயு தாங்கிய பாரியதொரு கப்பல்மாலைதீவு கடற்பகுதியை அண்மிக்கவுள்ளது.

அங்கிருந்து சிறு கப்பல்கள் ஊடாக தொடர்ச்சியாக எரிவாயுவை நாட்டுக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, அடுத்த மாதம் ஐந்தாம் திகதியின் பின்னர், நாளாந்தம் 12.5 கிலோகிராம் நிறைக் கொண்ட 80,000 சமையல் எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்க திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-6)

### சபுகஸ்கந்த
## எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் மூடப்படும் அபாயம்

(கொழும்பு)

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் மூடப்படும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தொடர்ந்தும் பொய்யான அறிக்கைகளை வெளியிட்டு வருவதாகவும் கடன் பத்திரங்கள் திறக்கப்பட்டாலும், இந்தியாவை தவிர எரிபொருள் ஏற்றுமதி இன்னும் வரவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதாக அமைச்சர் விஜேசேகர உறுதியளித்த போதிலும், அது வழங்கப்பட வில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் நாட்டில் எரிபொருள் நெருக்கடி இன்னும் மோசமாகும் என்றும் மண்ணெண்ணெய்க்கு பாரிய தட்டுப்பாடு நிலவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், விமானங்களுக்கான எரிபொருளை பாதுகாப்பதற்கான உத்தரவுகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அவர், நாட்டில் தற்போது 1,500 மெற்றிக் தொன் பெற்றோல் மாத்திரமே உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (நி-6)

## இலஞ்ச ஊழல் வழக்கில் இருந்து குமார வெல்கம விடுதலை



(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து குமார வெல்கமவை விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதிவான் நந்தன அமரசிங்க முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது இலங்கை போக்குவரத்து சபையில் இல்லாத பிரதித் தலைவர் பதவியை உருவாக்கி அரசாங்கத்திற்கு சுமார் 3 மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தியதாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## நீதியமைச்சர் விஜயதாச யாழ்.விஜயம்



(யாழ்ப்பாணம்)

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டார்

இந்து பௌத்த கலாசார பேரவையின் பொதுச் செயலாளர் எம்.டி.எஸ்.இராமச்சந்திரனின் அழைப்பையேற்று இந்து பௌத்த கலாசார பேரவையில் இரண்டாம் மொழி கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்திற்கு பிரதம அதிதியாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-33)

## வரிசையில் காத்திருப்பதால் மனஅழுத்தம் ஏற்படும்
### உளவியல் மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

(கொழும்பு)

மக்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்கின்றமையால், கடுமையான மன அழுத்தம் ஏற்படும் என உளவியல் மருத்துவ நிபுணர் ரூமி ரூபன் எச்சரித்துள்ளார்.

இந்த மன அழுத்தம் காரணமாக, உடல் ரீதியான பாதிப்புகளும் ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மன அழுத்தம் ஏற்படும் போது உடல் ரீதியான பாதிப்புகள் அதிகரிக்கின்றன.

வரிசைகளில் காத்திருக்கும் போது, சுகாதாரம் உள்ளிட்ட விடயங்கள் கருத்திற் கொள்ளப்படாமையும், மன அழுத்தத்திற்கான காரணமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம் இறுதியாட்டம் நாளை





கே.சி.சி.சி.விளையாட்டுக் கழகம் தமது 29 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தி வரும் கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன் இறுயாட்டத்தில் ஜெனியன்ஸ் அணியை எதிர்த்து சென்றலைஸ் அணி மோதவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன், சிறப்பு விருந்தினராக கொக்குவில் இந்து கல்லூரி அதிபர் எம்.ஞானசம்பந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (4-90)

# இறுதியாட்டத்தில் மோதல்
## அணிகளுக்கு அபராதமும் தடையும்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வல்வை விளையாட்டுக் கழகம் நடத்திய வைர விழா உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுயாட்டத்தில் இடம்பெற்ற கலவரத்தினைத் தொடர்ந்து கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் 3 வருடங்கள் உதைபந்தாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட தடை விதிக்கப்பட்டதுடன் 2 லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்திற்கு 6 மாத காலம் தடையும் 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை லீக்கின் செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இறுதியாட்டத்தில் நடைபெற்ற கலவரம் தொடர்பான வல்வை விளையாட்டுக் கழக அறிக்கை, நடுவர்கள் அறிக்கை, பார்வையாளர்கள் அறிக்கை மற்றும் நேரடி காணொளி என பலவை அவதானிக்கப்பட்டு இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் செயற்குழு அறிவித்துள்ளது. (4-90)

# மின்வெட்டில் சிக்கிய ஆஸி.வீரர்கள்

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள், உள்ளூர் உணவகம் ஒன்றிற்குச் சென்ற போது, இலங்கையில் நிலவும் மின்வெட்டால் பாதிக்கப்பட்டதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் பட் கம்மின்ஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் தெரிவிக்கையில்,

“இந்த வார தொடக்கத்தில் நாங்கள் உணவகம் ஒன்றுக்குச் சென்றோம். இதன்போது மின்வெட்டு ஏற்பட்டுள்ளது. மின்சாரம் வரும்வரை காத்திருக்கிறோம், மின்சாரம் வந்தவுடன் இரவு உணவு தொடரும்” என தெரிவித்தார். (4-6)



மாலைதீவில் நடைபெற்ற மேற்கு ஆசிய வலய 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான சதுரங்கப் போட்டியில் இலங்கை சார்பாக பங்கு பற்றிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் பிரகலதானன் ஜனுக்சன் வெண்கலப்பதக்கத்தை பெற்றுக்கொண்டார். (படம்: சிவசாந்தன்)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2648

### செறின்

இந்த வயதிலும் உழைத்து வாழும்
இந்த பெரியவர்களுக்கு
ஓர் ரோயல் சல்யூட்



### வெனிகின்


பணம் உயிரற்ற காகிதம் ஆனால்
அதுவும் சுயநலவாதி தான்



பணக்காரனிடம் உள்ள போது குட்டி போடுது
ஏழையிடம் வரும் போது வட்டி போடுது

### நிசாந்தினி

நாடி நரம்பெல்லாம் மெக்கானிக்
மூளை ஊறிப்போனவரோட



கண்டுபிடிப்பா தான் கண்டிப்பா இருக்கும்

### சாம்

நிம்மதியாக இருக்குற வயசுல
மனைவியை தேட வேண்டியது.



மனைவி வந்த பின்னாடி
நிம்மதியை தேட வேண்டியது.

### பெனிற்றா

சில மனிதர்களிடம் பணம் உள்ளது,
சில மனிதர்களிடம் மனம் உள்ளது



### கஜேந்திரா

தாய்மை அடைந்தால் அழகு குறைந்து விடும்
என்று தள்ளிப்போடும் பெண்களுக்கு
தெரிவதில்லை...



தாய்மை தான் ஒரு பெண்ணின்
உச்ச அழகு என்று

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
# நல்லூர் பிரதேச சபை

## Local Development Support Project-PT-I-CREDIT NUMBER-P 163305
## Renovation of Public Play Ground
## (LDSP/PT-I/NP/JAF/NPS/2022/07/Public.PG)

01. தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 09.10.2020 ஆம் திகதி 03/2020 ஆம் இலக்க, 11.01.2021 ஆம் திகதி 03/2020 (i) ஆம் இலக்க, நிதிச்சுற்றறிக்கைகள் பொருந்தும்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **'தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்'** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **தலைவர் பெறுகைக்குழு நல்லூர்பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் இடத்திலிருந்து 2022.06.27 ஆம் திகதியிலிருந்து 2022.07.22 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு **2022.07.25** ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

| இல | ஒப்பந்த இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | கேள்வி பிணை வைப்பு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | தொகை (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| 01 | LDSP/PT-I/NP/JAF/NPS/2022/06/PUBLIC.PG | RENOVATION OF PUBLIC PLAY GROUND AT THIRUNELVELY | 4.8300 | 60 நாட்கள் | C8- or Above (Building) | 63 Days | 73,000.00 | 24.10.2022 |

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2022.07.11** ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் மு.ப. **10.00** மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

**தலைவர்**
**உள்ளூர் அதிகார சபைப் பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேச சபை.**
**2022.06.25**
(சி-4534)

# இப்போதைக்கு தேர்தல் இல்லை - பிரதமர்

(கொழும்பு)

**அரசாங்கம் உறுதியான பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்தினால் மட்டுமே புதிய தேர்தலை நடத்த முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



முதலில் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட வேண்டும் எனவும் அதன் பின்னரே தேர்தலை நடத்த முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் விசேட அறிக்கையை வெளியிட்டு பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் மிக முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டவுடன், பொருத்தமான 225 பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்வதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமெனவும், அவர்களை தெரிவு செய்யும் பொறுப்பும் அதிகாரமும் பொது மக்களுக்கு உள்ளது எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் நாம் உறுதியாக உள்ளோம் என்பதை அரசியல்வாதிகளும், ஒட்டுமொத்த மக்களும் உலகுக்கு நிரூபிக்க வேண்டும் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (நி-6)

# பொருட்களின் விலை அதிகரிப்பால் மூடப்படும் பேக்கரிகள்

(கொழும்பு)



பேக்கரி உற்பத்திகளில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதால் சுமார் 3,000 பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், டீசல் மற்றும் பெற்றோல் தட்டுப்பாட்டுக்கு உடனடித் தீர்வுகளை வழங்குமாறு அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-6)

# இராசிபலன்

**25.06.2022**
**ஆனி 11, சனிக்கிழமை**
**துவாதசி பின்னிரவு 3.23 மணிவரை**
**பரணி பிற்பகல் 1.22 மணிவரை**
**சுபநேரம் 2.55-4.25 மணிவரை**
**இராகுகாலம் 8.55-10.25 மணிவரை**
**கார்த்திகை விரதம், சித்தாமிர்தம்**
**சந்திராஷ்டமம் -அத்தம், சித்திரை**

**வளவன்**

**மேஷம்:** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**ரிஷபம்:** எதிலும் வேகத்தைக் குறைத்து பொறுமையாகச் செயற்படுவது நல்லது, வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்:** நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும் நாள், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்களை நாடி வரலாம்.

**சிம்மம்:** சுணங்கிய காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கன்னி:** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**துலாம்:** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியமான நாள், பணத் தேவைகள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.

**தனுசு:** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புத்திசாதுரியமாக நடந்து காரியம் சாதிப்பீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புண்டு.

**மகரம்:** வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், புதிய பொருட்களை வாங்க எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்:** சகோதர வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, பணியில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம்.

**மீனம்:** குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டு.

**எல்லையற்ற இந்தப் பிரபஞ்சத்தின் மகா சக்தி உனக்குள்ளேயே இருக்கிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பேருந்து உரிமையாளர்கள் பருத்தித்துறையில் போராட்டம்

(கரணவாய்)

**யாழ்ப்பாணம் பருத்தித்துறை சாலை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரவு நேரங்களில் கள்ளச் சந்தையில் விற்பனை செய்வதற்கு டீசல் வழங்கப் படுவதாகவும் தமக்கு உரிய ஒழுங்கில் வழங்கப்படுவதில்லை என தெரிவித்து தனியார் பேருந்து உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை தமது பேருந்துகளை, பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு தள்ளிக் கொண்டு வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துக்களுக்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசலை பெற்றுக்கொள்ள முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. ஆனால் எமக்கு உரிய ஒழுங்கு முறைகளில் பருத்தித்துறை சாலை டீசலை விநியோகிக்கவில்லை. இரவு நேரங்களில் கள்ளச் சந்தை வியாபாரிகளுக்கு பெருமளவான டீசல் வழங்கப்படுகின்றது. பயணிகள் சேவையில் ஈடுபடும் எமக்கு டீசல் வழங்க இழுத்தடிப்புகள் செய்து உரிய ஒழுங்கில் டீசல் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம் சாட்டியே போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆ.சிறி, பருத்தித்துறை பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி, காங்கேசன் துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், இலங்கை போக்குவரத்துச் சபையின் வட மாகாண பிரதம பிராந்திய முகாமையாளர் குணபால செல் வம் ஆகியோர் வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

அதனடிப்படையில் நாளாந்தம் சேவையில் ஈடுபடும் 25 போக்குவரத்து வாகனங்களுக்கு தினமும் 750 லீற்றர் டீசல் வழங்குவதாக உறுதிமொழி அளிக்கப்பட்டதை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து தனியார் போக்குவரத்து சேவை வழமைக்கு திரும்பியது. (4-6-33-60)

## மாயமான மீனவர்கள் கரை திரும்பினர்

(கரணவாய்)

பருத்தித்துறை சக்கோட்டை பகுதியில் இருந்து மீன்பிடிப்பதற்காக சென்று கரை திரும்பாத நான்கு மீனவர்களும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை திரும்பியுள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை சக்கோட்டை பகுதியில் இருந்து கடலுக்குச் சென்ற நான்கு பேர் கடந்த புதன்கிழமை கரை திரும்பியிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் கரை திரும்பாததை அடுத்து கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கரை திரும்பாத நான்கு மீனவர்களும் சென்ற படகின் வெளியிணைப்பு இயந்திரம் பழுதடைந்ததன் காரணமாக நடுக்கடலில் தத்தளித்திருந்த நிலையில் அவர்களை தேடிச் சென்ற மீனவர்கள் அவர்களின் வெளியிணைப்பு இயந்திரத்தை சீர்செய்து நேற்று முன தினம் அதிகாலை கரைக்கு அழைத்து வந்தனர். (4-6-60)




## காரைநகரில் காணி சுவீகரிப்பு எதிர்ப்பால் கைவிடப்பட்டது

(குப்பிழான்)

யாழ்.காரைநகரில் கடற்படையினருக்கான காணி சுவீகரிப்பிற்கான அளவீடு முயற்சி பொதுமக்கள், தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளின் கடும் எதிர்ப்பினால் இடைநிறுத்தப்பட்டது.

காரைநகர் தெற்கு ஜே-44 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மடத்துவெளி எலரா கடற்படைத்தளம் விஸ்தரிப்புக்காகப் பொதுமக்களின் 11 ஏக்கர் காணி யினை அளவீடு செய்வதற்கு நேற்று முன் தினம் வியாழக்கிழமை நில அளவைத் திணைக்களத்தினர் வருகை தந்தனர். இந்நிலையில் குறித்த பகுதியில் கூடிய பொது மக்கள், தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் எதிர்ப்பால் காணியை அளவீடு செய்யும் முயற்சி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. இதே வேளை, எதிர்ப்பு வெளியிட்டவர்களின் எழுத்து மூலமான ஆவணத்தினை பெற்றுக் கொண்டு அளவீடு செய்யாது திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர். (4-6-18)

## யாழ்ப்பாணம் மாநகர சபையால் வாகன தரிப்பிட கட்டண அறவீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையினால் மாநகர எல்லைக்குட்பட்ட வீதிகளில் தரித்து நிற்கின்ற வாகனங்களிற்கான வாகன தரிப்பிடக் கட்டணம் அறவிடப்படுகின்ற செயற்பாடு நீண்ட காலமாக நடைபெறும் ஒன்றாகும். இக்கட்டண அறவீடு மாநகர சபையின் இறைவரிப் பரிசோதகரால் அறவிடப்பட்டு வந்தது. குறித்த பணிகளை எமது ஊழியர்கள் மூலம் மேற்கொள்வதில் சில வசதியீனங்கள் இருந்தமையினால் தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் கட்டணம் அறவிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் காங்கேசன்துறை வீதி- ரில்கோ சுற்று வட்டத்திலிருந்து மனோகரா திரையரங்கு வரையும், ஆஸ்பத்திரி வீதி - பருத்தித்துறை வீதியிலிருந்து லைடன் காமன் சந்தி வரையும், கஸ்தூரியர் வீதி - ஆஸ்பத்திரி வீதியிலிருந்து நாவலர் வீதி வரையும், மின்சார நிலைய வீதி முழுமையாக, C பொன்னம்பலம் வீதி, வைரவர் கோயில் வீதி, மணிக்கூட்டு வீதி, மகாத்மா காந்தி வீதி, பலாலி வீதி முழுமையாக, ஸ்ரான்லி வீதி முழுமையாக ஆகிய பகுதிகளில் நிறுத்தப்படும் வாகனங்களிற்கு கட்டணம் அறவிடப்படவுள்ளது.

துவிச்சக்கர வண்டிக்கு நாள் முழுவதும் 10 ரூபாய், மோட்டார் சைக்கிளிற்கு நாள் முழுவதும் 20 ரூபாய், முச்சக்கர வண்டி நாள் முழுவதும் 30 ரூபாய், வான், கார், ஹயஸ், பட்டா, வடி ரக சிறிய வாகனங்களுக்கு 3 மணித்தியாலங்களுக்கு 50 ரூபாய் லொறி, கன்டர், பெரிய வாகனங்களுக்கு 3 மணித்தியாலங்களுக்கு 100 ரூபாய் என்ற அடிப்படையிலும் கட்டணம் அறவிடப்படவுள்ளது. (4-6)

## குதிரை வண்டியில் பயணத்தை ஆரம்பித்த அருட்தந்தை



(யாழ்ப்பாணம்)

யாழில் எரிபொருள் தட்டுப்பாட்டினால் குதிரை வண்டியில் தனது பயணத்தை அருட்தந்தையர் ஒருவர் மேற்கொண்டு வருகின்றார்.

நாடு பூராகவும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த அருட்தந்தை ஒருவர் தனக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதில் இடர்பாடுகள் காணப்படுவதன் காரணமாக குதிரை வண்டியில் தனது வழமையான செயற்பாடுகளை மேற்கொள்வதாக தெரிவித்தார். (4-6-18-33)

## பொருளாதார நெருக்கடி நிலை மருத்துவர்களின் சம்பளம் குறைப்பு

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் மருத்துவர்களின் சம்பளம் குறைக்கப்பட்டு முழுமையாக வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் க.உமாசுதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு நெருக்கடிகள் தற்போது நாட்டில் காணப்பட்டாலும் கூட அதை எதிர்கொண்டு மருத்துவர்கள் தங்களால் இயன்றவரை பணியாற்றி வருகின்றனர்.

நாம் பல்வேறு கோரிக்கைகளை உயர் அதிகாரிகளுக்கு முன்வைத்த போதும் அதனைக் கருத்தில் கொள்ளாது வடமாகாணத்தில் மருத்துவர்களின் சம்பளத்தை குறைத்துள்ளதுடன் முழுமையாக வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது. சம்பளம் வழங்கப்பட முன்னரே உரிய அதிகாரிகளுடன் எழுத்து மூலமாக நாம் கோரிக்கை விடுத்த போதும் உங்களது சம்பளம் குறைக்கப்படாது என்று அவர்களால் எமக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது.

சம்பளம் வழங்கப்படாமல் விடுவது தொடர்பாகவோ சம்பளம் குறைப்பு தொடர்பாகவோ நிறுவனங்கள் முன்னரே அறிவிக்க வேண்டும் என்பது ஸ்தாபன விதி. ஆனால் எதுவும் பின்பற்றப்படாமல் இங்கு சம்பளம் குறைக்கப்பட்டுள்ளது.

மிகவும் சிக்கலான காலத்தை நாம் எதிர்கொண்டு சேவைகளைச் செய்யும் போது சம்பளக் குறைப்பு மேற்கொள்வதை ஒருபோதும் ஏற்க முடியாது. ஆகவே உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை எனில் நாம் எதிர் வரும் காலத்தில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயாராக உள்ளோம் எனத் தெரிவித்தார். (4-6-33)

## நாய்களை கட்டி வளர்க்கவும்

(குப்பிழான்)

தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாகத் தடுப்பூசிகளுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. நாய்கள் கடித்தால் கூட ஊசி போடுவதற்கு மருந்தில்லை.

ஆகவே, நாய்களை அனைவரும் கட்டி வளர்க்குமாறு நல்லூர் பிரதேச சபை ஊடாக நாங்கள் விழிப்புணர்வை மேற்கொள்கின்றோம் என நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் V.மயூரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை சபை மண்டபத்தில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஒவ்வொரு வட்டார உறுப்பினர்களும் தத்தமது வட்டாரங்களில் இதனை ஒரு விழிப்புணர்வாகச் செய்யுங்கள் எனவும் அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (4-6-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடிக்கு காரணமான ஜனாதிபதி உடனடியாக பதவி விலக வேண்டும்

## அமெரிக்க பிரபல பொருளியலாளர் வலியுறுத்து


**(வோஷிங்டன்)**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைகளே உணவு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படுவதற்குப் பிரதான காரணம் என்று சுட்டிக்காட்டியுள்ள அமெரிக்காவின் பிரபல பொருளியலாளர் ஸ்டீவ் ஹன்க், ஜனாதிபதி பதவி விலக வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.**

அமெரிக்காவின் முதலாவது ஆய்வுப்பல்கலைக்கழகமான ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பொருளியலாளரான ஸ்டீவ் ஹன்க் மிக மோசமடைந்துவரும் இலங்கையின் பொருளாதார நிலவரம் குறித்து கடந்த சில மாதங்களாக தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் தொடர்ச்சியாகப் பதிவுகளைச் செய்து வருகின்றார்.

அதன்படி இலங்கையின் பொருளாதார நிலவரம் தொடர்பில் நேற்று முன்தினம் செய்திருக்கும் பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளா தார நிலவரம் படிப்படியாக மிக மோசமடைந்து வருவதாக அப்பதிவில் சுட்டிக்காட்டியுள்ள அவர், தனது அண்ணளவான மதிப் பீட்டின்படி இலங்கையின் வருடாந்தப் பணவீக்கம் 130.14 சதவீதமாகக் காண ப்படுவதாகவும் இது நாட்டின் உத்தியோகபூர்வ வருடாந்தப் பணவீக்கமாகக் காணப்படும் 39.10 சதவீதத்தின் 3 மடங்கை விடவும் உயர்வாகும் என்றும் தெரிவித்துள்ளார்.



அதுமாத்திரமன்றி இவ்வா ண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து இலங்கை ரூபாவின் பெறுமதி 50 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் கொள்கைகளே நாட்டில் உணவு, உரம் மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்திருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள பிரபல பொருளியலாளர், தற்போது இலங்கை அதன் கடன்களை மீளச்செலுத்த முடியாதவாறு முறிவடைந்திருப்பதாகவும் இது ஜனாதிபதி பதவி விலக வேண்டிய தருணமென்றும் தெரிவித்துள்ளார். (நி-6)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 13 சூரி 8 செவ் 5<br>தகைமை/தொழில்: A/L (தனியார் தொழில் முகாமையாளர்)<br>உயரம்: 6'1"<br>எதிர்பார்ப்பு: சுவிட்சர்லாந்து மட்டும்<br>தொ.இ: B/12764 | பிறப்பு: 1992 கிறிஸ்தவம் RC<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: சூரி 1 செவ் 12<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: O/L தையல்<br>எதிர்பார்ப்பு: நிரந்தரதொழில்<br>தொ.இ:G/12773 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: சூரி 6 செவ் 4 இல் உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: Q.S தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: கொழும்பில் வேலை செய்பவர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12767 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: 10 சூரி. செவ் 6 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc Computer Science<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச தொழில்<br>தொ.இ: G/12775 |
| பிறப்பு: 1993, இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: சூரி 10 செவ் 2 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Software Engineer (தனியார் தொழில் கனடா)<br>எதிர்பார்ப்பு: விஞ்ஞான கணித பட்டதாரி சைவபோசனம் மட்டும்<br>தொ.இ: B/12769 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 1<br>கி.பா: சூரி, செவ் 9 இல்<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்: Business Management Banking<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (லண்டன் மட்டும்)<br>தொ.இ:G/12776 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: 70 சூரி 1 செவ் 7இல் உயரம்:170 cm<br>தகைமை/தொழில்: பீசாகடை உரிமையாளர் (பிரான்ஸ்)<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண் பிரான்ஸில் வசிக்கும் இலங்கைப் பெண்<br>தொ.இ: B/12770 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: சூரி, செவ் 1 இல்<br>உயரம் :5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/12777 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**நுண்ணீர்ப்பாசன (Micro irrigation) கோட்பாடுகள்**
**(விவசாய பொறியியல் துறை சான்றிதழ் கற்கைநெறி)**

விவசாயப் பொறியியல் துறை, விவசாயபீடத்தினால் நடாத்தப்படவுள்ள சான்றிதழ் கற்கை நெறிக்கு ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை**

- தரம் 9 வரை கற்றிருத்தல்.

**கற்கைநெறி தொடர்பான விபரம்**

- கற்கை நெறிக்கான கட்டணம் - ரூபா 5000/=
- மொழிமூலம் - தமிழ்
- கற்கைநெறிக் காலம் - 8 வாரங்கள்

கற்கை நெறிக்கான விண்ணப்ப படிவத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் (www.jfn.agri.ac.lk) அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீடத்தின் பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பதாரிகள் தமது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் தமது தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணப்பிரதிகளை **22.07.2022** இற்கு முன்னர் பீடாதிபதி, விவசாயபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அறிவியல்நகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
மேலதிக தகவல்களுக்கு இணைப்பாளர், கலாநிதி. ந. கண்ணன், அவர்களுடன் **021 206 0174** அல்லது **077 651 1553** எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்** (C-4536)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**பண்ணை இயந்திரங்களின் (Farm machinery) கோட்பாடுகள்**
**(விவசாயபொறியியல் துறை சான்றிதழ் கற்கைநெறி)**

விவசாயப்பொறியியல் துறை, விவசாயபீடத்தினால் நடாத்தப்படவுள்ள சான்றிதழ் கற்கை நெறிக்கு ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை**

- தரம் 9 வரை கற்றிருத்தல்.

**கற்கைநெறி தொடர்பான விபரம்**

- கற்கை நெறிக்கான கட்டணம் - ரூபா 7500/=
- மொழிமூலம் - தமிழ்
- கற்கைநெறிக் காலம் - 8 வாரங்கள்

கற்கைநெறிக்கான விண்ணப்பப்படிவத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் (www.jfn.agri.ac.lk) அல்லது அறிவியல்நகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீடத்தின் பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பதாரிகள் தமது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் தமது தகைமைகளை உறுதிப் படுத்தும் ஆவணப் பிரதிகளை **22.07.2022** இற்கு முன்னர் பீடாதிபதி, விவசாயபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அறிவியல்நகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
மேலதிக தகவல்களுக்கு இணைப்பாளர், கலாநிதி. ந. கண்ணன், அவர்களுடன் **021 206 0174** அல்லது **077 651 1553** எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்** (C-4535)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 80

# எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே...



தினமும் தன் துவிச்சக்கர வண்டியில் தன் மகளை பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் தந்தை ஒருவர் ஒரு வித்தியாசமான விடயத்தை தொடர்ந்து செய்து வந்தார்.

மகளுடன் வீதியில் செல்லும் போது ஏதாவது ஒரு கடையின் பெயர்ப் பலகையை அவளை படிக்கச் சொல்லுவார்.

அந்தக் கடையில் நடக்கும் வேலைகள், அதற்கான பொருட்கள், தயாரிக்கும் முறை என்று மகளுக்கு சொல்லிக்கொண்டே போவார்.

உதாரணமாக ஒரு டீ கடை என்றால்... "எனக்குத் தெரிஞ்சவர் இந்த கடைக்காரர்.

இங்கே 10 வருடமாக டீ கடை வைத்திருக்கிறார். தினமும் காலையில் 5 மணிக்கே கடையை திறந்து விடுவார். அதற்காக, 4 மணிக்கே எழுந்து விடுவார். இரவு 10 மணி வரைக்கும் கடை இருக்கும். ஒரு நாளில் 17 மணி நேரம் வேலை செய்கிறார். அதில் முக்கால்வாசி நேரம் நின்றபடியேத்தான் இருப்பார். நீ வகுப்பறையில் உட்கார்ந்து பாடம் படிப்பாய். நானும் வேலைத்தளத்தில் உட்கார்ந்து வேலை செய்வேன். ஆனால், இவர் உட்கார்ந்து வேலை செய்ய முடியாது. நின்றபடியே வேலை செய்தால்தான் வேலை நடக்கும். ஒரு குறிப்பிட்ட நேரத்துல கூட்டம் அதிகமாக இருக்கும். அந்த நேரத்துல யாரையும் அதிகம் காத்திருக்க வைக்க முடியாது.

அவர் சொல்ல மகளும் இடையிடையே நிறைய கேள்விகள் கேட்பாள். அவற்றுக்கெல்லாம் பதில் சொல்லியவாறு அழைத்துச் சென்று பாடசாலையில் விடுவார். ஒரு நாள் வகுப்பில் ஒரு பாடத்தில் நடந்த உரையாடலில், பூ விற்பவர் பற்றிய பேச்சு வந்தது. உடனே எழுந்த அந்தசிறுமி அதுபற்றி தனக்குத் தெரிந்ததை எல்லாம் கோர்வையாக சொல்லிக்கொண்டே போனாள்.

அது மற்ற குழந்தைகளுக்கு மட்டுமல்ல அந்த வகுப்பு ஆசிரியைக்கும் தெரியாத பல செய்திகளை வெளிப்படுத்துவதுமான ஒரு நிகழ்வாக இருந்தது.

அந்தத் தகவல்களுக்குள் ஒரு மனிதரின் வாழ்வியல் முறை, சக மனிதருடன் நமக்குள்ள தொடர்பு, அவர்களின் முக்கியத்துவம், அவர்களின் பொருளாதார சூழல் ஆகியவை வெளிப்பட்டன. அவள் வகுப்பு ஆசிரியை வியந்து கைதட்டினார். மற்ற குழந்தைகளும் கூட அவளை வியந்து பார்த்தனர். தன் தந்தைக்கு மனதார நன்றி சொன்னாள் அந்தச் சிறுமி.

பொதுவாக, பொருளாதார ரீதியாக எளிய பணிகளைச் செய்பவர்களை நம் குழந்தைகளுக்கு நாம் எப்படி அறிமுகம் செய்கிறோம் என்று யோசித்துப் பாருங்கள்..?!

"சரியா படிக்கவில்லை என்றால் இப்படித்தான் நீயும் கூலி வேலை செய்து கஷ்டப்படணும்" என்கிறோம். அதாவது, நம் குழந்தைகளுக்குள் பயத்தைப் புகுத்தி அதன் மூலமாக புது பொறுப்பை உருவாக்க இதை ஓர் உத்தியாக நினைக்கிறோம்.

ஆனால், அப்படிச் சொல்வதால் அவர்களுக்குள் பயம் மட்டுமா உருவாகிறது

நிச்சயமாக இல்லை! அந்தப் பணியைத் தாழ்வாகவும், அதைச் செய்பவர்கள் மீது இயல்பாகவே மதிப்பும் குறைகிறது. இது சரியான வழிமுறையா? இங்கே செய்யப்படும் எல்லாவிதமான பணிகளும் முக்கியமானவைகளே. எல்லா மனிதர்களும் முக்கியமானவர்களே

என்பதை நாம் நம் குழந்தைகளுக்கு உணர்த்துவது மிக முக்கியம். எந்த குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே !!! பின் நல்லவராவதும் தீயவராவதும் பெற்றோர்கள் வளர்ப்பினிலே!!!

subarmaneam ketheeswra

# குரங்

# அவசர நி

# உலக சு

(ஜெனிவா)

## குரங்கு அம்மை நோய் பாதிப்பை, சர்வ

## அவசர நிலையாக உலக சுகாதார அ

இந்த தொற்றுநோய் குறிப்பிட்ட ஒரு நாடு அல்லது பிராந்தியத்திற்கு மட்டும் பரவக்கூடியதல்ல என்பது தெளிவாகிறது. சமூகப் பரவல் எங்கு நடந்தாலும் உடனடி நடவடிக்கைகளால் கவனிக்கப்பட வேண்டும்.

கடுமையான வலி, பயம், கண் பார்வை இழப்பு மற்றும் உயிரிழப்பு ஆகிய பாதிப்புகள் குரங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களில் காணப்படுகின்றன.

தற்போதைய சூழலில் சமூக பரவலாக நோய் தொற்றின் வேகம் விரிவடைவதால் இதுவரை காப்பாற்றப்பட்ட

## கிழக்கு உக்ரைனின் இரண்டு நகரங்களை

# சுற்றிவளைக்கும் ரஷ்யா பின்வாங்கும் உக்ரைன்

(கீவ்)


கிழக்கு உக்ரைன் - லுஹான்ஸ் பிராந்தியத்தில் உக்ரைன் கட்டுப்பாட்டில் உள்ள கடைசி இரண்டு நகரங்களான லைசிசான்ஸ்க் மற்றும் சீவிரோடோனெட்ஸ்கில் இருந்து உக்ரைனிய துருப்புக்கள் பின்வாங்க வேண்டியிருக்கலாம் என்று பிராந்திய ஆளுநர் செர்ஹி கெய்டாய் தெரிவித்துள்ளார்.

உக்ரைனிய துருப்புக்கள் குறுகிய பகுதிக்குள் சுற்றிவளைக்கப்படுவதை தவிர்ப்பதற்காக இந்த முடிவை எடுக்க வேண்டியேற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உக்ரைனியப் படைகள் இவ்வாறு பின்வாங்கினால் லுஹான்ஸ் பிராந்தியத்தை முழுமையாகக் கைப்பற்றும் ரஷ்யாவின் முக்கிய குறிக்கோளுக்கு அது வலுச்சேர்க்கும்.

# அடிபட்ட கன்றுக்கு பின்னால் மருத்துவமனை வரை ஓடிய தாய்ப்பசு

## சமூக வலைத்தளங்களில் வைரலாகும் வீடியோ



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கு அம்மை நோய்
# லையாக அறிவித்தது
# காதார அமைப்பு

**ர்வதேச அளவில் பொது சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.**



குழந்தைகளுக்கு கூட தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. வளர்ப்பு பிராணிகள் உட்பட வனவிலங்குகளுக்கு பரவும் ஆபத்தும் உள்ளது.

உலகம் முழுவதும் இது வரை 58 நாடுகளில் குரங்கு அம்மை பாதிப்பு பதிவாகியுள்ளது.

உலகளவில், 3,417 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (நி-6)

ஒரு நதியால் பிரிக்கப்படும் லைசிசான்ஸ்க் மற்றும் சீவிரோடோனெட்ஸ் நகரங்கள் தற்போது முக்கிய போர்க்களமாக மாறியுள்ளன. இங்கு சண்டை உச்ச கட்டத்தை நெருங்குகிறது என லுஹான்ஸ் பிராந்திய ஆளுநர் தெரிவித்துள்ளார்.

தற்போது லைசிசான்ஸ்க் நகரில் இருந்து 5 கி.மீ. தொலைவில் ரஷ்ய துருப்புக்கள் நிலைகொண்டுள்ளன. இந்நகரில் உள்ள உக்ரைனிய படைகளைச் சுற்றி வளைக்க ரஷ்யப் படைகள் முயற்சித்து வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் உக்ரைனிய துருப்புக்கள் பின்வாங்க வேண்டியிருக்கும் என்று ஆளுநர் செர்ஹி கெய்டாய் தெரிவித்தார்.

சுற்றிவளைப்பில் சிக்கிக்கொள்வதைத் தவிர்ப்பதற்காக துருப்புக்கள் புதிய நிலைகளுக்கு பின்வாங்குமாறு உக்ரைனிய தரப்பில் இருந்து எந்தநேரத்திலும் கட்டளை இடப்படலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தற்பாது காப்புக்காக உக்ரைன் சில தந்திரோபாய மாற்றங்களைச் செய்யவேண்டியிருக்கும் என அந்நாட்டு ஆயுதப் படைகளின் தலைமை தளபதி வலேரி ஜலுஷ்னி ஒப்புக்கொண்டார். (நி-6)

(டில்லி)

அம்மா என்றாலே அளவு கடந்த அக்கறை, பாசம், சுயநலம் இன்மை என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

மனிதர்களுக்கு மட்டும் இல்லாமல் அனைத்து உயிர்களுக்கும் அம்மா பாசம் என்பது பொதுவானது.

இதனை நிரூபிக்கும் வகையில், இந்தியாவில் நெகிழ்ச்சியான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கன்றுக்குட்டியொன்று அடிபட்டு கீழே வீழ்ந்துள்ளது.

இதனை அவதானித்தவர்கள் மோட்டார் சைக்கிள் ஒன்றில் கன்றுக்குட்டியை நபர் ஒருவரின் மடியில் அமர்த்தி கால் நடை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதனை அவதானித்த தாய்ப்பசு, குறித்த மோட்டார் சைக்கிளின் பின்னால் மருத்துவ மனை வரைக்கும் ஓடியுள்ளது.

இந்தக் காட்சி தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. (நி-6)

## 150 இற்கும் மேற்பட்ட

# பாரம்பரிய தளங்கள் உக்ரைனில் அழிப்பு



(ஜெனிவா)

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையிலான போரில் உக்ரைனில் உள்ள 150 இற்கும் அதிகமான பாரம்பரிய தளங்கள் ரஷ்யாவினால் அழிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.நா.வைச் சேர்ந்த வல்லுநர்கள் இந்த தகவலை தெரிவித்துள்ளனர்.

அதில் 150 இற்கும் அதிகமான பாரம்பரிய மற்றும் கலாசாரம் சார்ந்த தளங்கள் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ அழிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

அழிக்கப்பட்டுள்ள தளங்களில் அருங்காட்சியகங்கள், நினைவுச் சின்னங்கள், தேவாலயங்கள், மதம் சார்ந்த கட்டடங்கள் மற்றும் நூலகங்கள் ரஷ்யப்படைகளால் தாக்கி அழிக்கப்பட்டன. இந்தத் தகவலை யுனெஸ்கோ உறுதிப்படுத்தியுள்ளது.

இது குறித்து யுனெஸ்கோவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளதாவது,

"உக்ரைனின் கலாசாரம் சார்ந்த தளங்களில் ரஷ்யா தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டும். எந்த ஒரு சூழலிலும் கலாசாரம் சார்ந்த தளங்களில் தாக்குதல் நடத்தக் கூடாது." உக்ரைன் தரப்பில், ரஷ்யா யுனெஸ்கோவில் இருந்து நீக்கப்பட வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த மாதம் ரஷ்யாவின் தலைமையில் நடைபெற விருக்கும் உலக பாரம்பரியத் தளங்களுக்கான கூட்டத்தை தள்ளி வைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிசையால் நிரம்பிய மன்னார்

# பொறுமையிழந்து மக்கள் போராட்டம்

(மன்னார்)

**மன்னார் மாவட்டம் முழுவதும் நேற்று வெள்ளிக்கிழமை மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் எரிவாயு விற்பனை முகவர் நிலையங்களுக்கு முன் நீண்ட வரிசையில் எரிபொருள் மற்றும் எரிவாயுக்களை பெற்று கொள்வதற்கு வரிசையில் காத்திருந்தனர்.**

இந்த நிலையில் மன்னாரில் குறிப்பிட்ட ஒரு எரிவாயு முகவர் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற ஒரு தொகுதி லாப் எரிவாயுக்களை மக்களுக்கு வழங்காமல் உரிமையாளர் பதுக்கி வைத்துள்ளதாக மக்கள் குறித்த விற்பனை முகவர் நிலையத்திற்கு முன்பாக வீதிகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில்

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஸ்ரான்லி டிமேல் மற்றும் பிரதேச செயலாளர் ம.பிரதீப் தலையீட்டின் காரணமாக பதுக்கி வைக்கப்



பட்டிருந்த 21 எரிவாயு சிலிண்டர்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (4-6-285)

## புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் பொங்கல் விழா

(நெளுக்குளம்)

வவுனியா, புதூர் நாகதம்பிரான் கோவிலின் வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம் 27 ஆம் திகதி சிறப்பாக நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அன்றையதினம் காலையிலிருந்து விசேட பூஜைகள் நடைபெறவுள்ளதுடன், இரவு பொங்கலும் நடைபெறவுள்ளது.

குறித்த பொங்கல் விழாவானது, கடந்த இரண்டு வருடங்களாக கொரோனா பெருந்தொற்று காரணமாக மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-299)

# ஆண்டாங்குளம், நித்தகைகுளம் விடுவிக்கப்பட வேண்டும்

## இடம்பெயர்ந்த மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறை பற்றின் ஆண்டாங்குளம் கிராமத்தின் நிலங்கள், நித்தகை குளத்தின் வயல் நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1984 ஆம் ஆண்டு தமிழர்களின் பூர்வீக கிராமமான ஆண்டாங்குளத்தில் இருந்து போர் நடவடிக்கை காரணமாக மக்கள் இடம் பெயர்ந்தனர்.

2009ஆம் ஆண்டின் பின்னர் ஆண்டாங்குளம், நித்தகைகுளப் பகுதிகளுக்கு மக்கள் குடியமரவும் பயிர்ச் செய்கையில் ஈடுபடவும் வனவளத் திணைக்களம் அனுமதி வழங்கவில்லை.

வனவளத் திணைக்களத்தின் பிடியில் தற்போதும் இந்நிலங்கள் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறை பற்று பிரதேச செயலகம் என்பவற்றில் இக்கிராமங்களில் குடியேற்றம் பயிர்ச் செய்கை தொடர்பாக பல தடவைகள் ஆராயப்பட்ட போதிலும் இதுவரை தீர்வுகள் கிடைக்கப் பெறவில்லை.

தற்போது அரசாங்கம் வன வளத்திணைக்களத்தின் பிடியில் உள்ள காணிகளை விடுவித்து பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வரும் நிலையில் ஆண்டாங்குளத்தில் மக்கள் சென்று குடியேறி பயிர்ச் செய்கையில் ஈடுபடவும் நித்தகை குளத்தின் கீழ் காணப்படுகின்ற 650 இற்கு மேற்பட்ட நிலப்பரப்பில் விவசாய முயற்சிகளில் ஈடுபடவும் அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்பதே இக் கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் கோரிக்கையாக உள்ளது. (4-6-350)

# மன்னாரில் புலியை வேட்டையாடி கொன்றதாக ஒருவர் கைது

(மன்னார்)

மன்னார் சிலாவத்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப்பகுதியில் அரிய வகை புலி ஒன்றை கொலை செய்து அதன் தோல் மற்றும் பற்களை தனது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சிலாவத் துறை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் உடைமையில் புலியின் தோல் மற்றும் பற்கள் மீட்கப்பட்ட நிலையில் குறித்த நபர் புலியை கொலை செய்துள்ளார் என்ற அடிப்படையில் பொலிஸார் அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தனர்.

குறித்த புலி சந்தேக நபரால் கொலை செய்யப்படவில்லை எனவும் இறந்த ஒரு புலியின் தோலையும் பற்களையுமே குறித்த சந்தேக நபர் மீட்டு வைத்திருந்தார் என சந்தேக நபர் சார்பாக சட்டத்தரணி வாதிட்ட நிலையில், உடைமையில் வைத்திருந்த புலித் தோலுக்குரிய புலியானது மிக அரிய வகை புலி என்பதன் அடிப்படையிலும் அவ்வாறான புலிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும் சந்தேக நபரை எதிர்வரும் 30 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான உத்தர விட்டுள்ளார். (4-6-285)




புதுக்குடியிருப்பு கோம்பாவில்
அருள்மிகு நாகதம்பிரான் ஆலய
வருடாந்த பொங்கல் விழா விஞ்ஞாபனம் - 2022

புதுக்குடியிருப்பு கோம்பாவில் அருள் மிகு நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 27.06.2022 திங்கட்கிழமை வழமை போன்று வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. நாகதம்பிரான் அடியவர்கள் அனைவரும் வருகை தந்து நாகதம்பிரானின் பேரருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

விசேட அறிவித்தல்

❖ வியாபாரம் செய்ய விரும்பும் வியாபாரிகள் மற்றும் நேர்த்திக்கடன் செய்ய விரும்புவோர் ஆலய பரிபாலன சபையினருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்

அனைவரும் வருக நாகதம்பிரானின் அருளைப் பெறுக

தொ.பே.இல.
077 346 7242, 077 744 5951,
076 141 8196

ஆலய பரிபாலன சபை
(C-4538)


# சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் விநியோகம்



(மன்னார்)

மன்னார் நகர்ப்பகுதிகளில் கடமையாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கும் செயற்பாடு நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை தொடக்கம் முன்னெடுக்கப்பட்டது.

தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள IOC எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அனுமதி பெற்ற சுகாதார ஊழியர்களுக்கான எரிபொருள் வழங்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான சுகாதார ஊழியர்கள் வரிசையில் நின்று எரிபொருளை பெற்றுச் சென்றனர்.

அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் சுகாதார ஊழியர்களுக்கும் கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று இவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்டு எரிபொருள் வழங்கப்பட்டது. (4-6-100-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிகாயங்களுக்காக சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு

(கொழும்பு)

**அடுப்புகளை பற்றவைக்க மண்ணெண்ணெய்க்குப் பதிலாக பெற்றோலைப் பயன்படுத்துவதால் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை 50 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.**

கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் கயான் ஏகநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார். இந்த நாட்களில் வரிசையில் நிற்கும் வாகனங்களுக்கு பெற்றோல் கிடைக்கிறது.

அதனால் அடுப்புக்களை பற்ற வைக்க பெற்றோலை பயன்படுத்துகின்றனர். இதனால் பலர் எரிகா யங்களுக்கு உள்ளாகின்றனர். மேலும், வீடுகளில் எண்ணெயினை சேமித்து வைப்பதனாலும் இது போன்ற ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளது. பெற்றோலைக் கையாள்வது இலகுவானது அல்ல எனவும், ஆபத்து மிக அதிகம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## இலங்கையுடனான பொருளாதார ஒத்துழைப்பு வலுப்படுத்தப்படும்-பங்களாதேஷ் தெரிவிப்பு



(கொழும்பு)

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டதாக பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் அரிபுல் இஸ்லாம் தெரிவித்துள்ளார்.

இதனால், ஆடை, விவசாயம், சுகாதாரம் மற்றும் முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முன்னேற்றம் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்த போதே உயர்ஸ்தானிகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் பங்களாதேஷ் வழங்கும் ஒத்துழைப்பை ஜனாதிபதி பாராட்டினார்.

வர்த்தகம், சுற்றுலா மற்றும் கல்வி ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய உயர்ஸ்தானிகர், தற்போதைய நிலைமையை இலங்கையால் விரைவாக வெற்றி கொள்ள முடியும் என நம்பிக்கை தெரிவித்தார். (நி-6)

## இந்தியாவின் உதவித்தொகை இலங்கையை வந்தடைந்தது



(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இரண்டாவது மனிதாபிமான உதவித் தொகை நேற்று வெள்ளிக்கிழமை நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல, அமைச்சர் நளின் பெர்னாண்டோ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள் குழுவினர் இந்த உதவிகளைப் பெற்றுக் கொண்டனர்.

3000 கோடி ரூபாவுக்கு அதிக பெறுமதியுடைய மனிதாபிமான உதவிகள் அடங்கிய கப்பல் இந்தியாவின் தூத்துக்குடியில் இருந்து இலங்கையை வந்தடைந்தது. (நி-6)

## அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 35 பேர் பாணந்துறையில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 35 பேர் பாணந்துறை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படை ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மேலதிக நடவடிக்கைகளுக்காக குறித்த அனைவரையும் பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## சிகரெட் விற்பனை உயர்வு

(கொழும்பு)

முடிவடைந்த காலாண்டில் முந்தைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சிகரெட்டின் விற்பனை அளவு 5% அதிகரித்துள்ளதாக இலங்கை புகையிலை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கை புகையிலை நிறுவனத்தின் அண்மைய நிதி அறிக்கையின்படி மார்ச் 31, 2022 இல் முடிவடைந்த காலாண்டில் ரூ. 37 பில்லியன் விற்பனையில் அரசாங்க வரிகளாக 27.84 பில்லியன் மற்றும் ரூ. 2.58 பில்லியன் வருமான வரி செலுத்தப்பட்டுள்ளதாகவும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வருட காலாண்டில் நிறுவனத்தின் வரிக்குப் [illegible] குறிப்பிட்டுள்ளது. (நி-6)

## சலுகை வாகன அனுமதிப் பத்திரத்தால் இலங்கைக்கு பேரிழப்பு

### மொரட்டுவ பல்கலைக்கழகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சலுகை வாகன அனுமதிப்பத்திரம் காரணமாக இலங்கைக்கு வருடாந்தம் சுமார் 94 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் போக்குவரத்து மற்றும் விநியோக முகாமைத்துவ பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் அமல் குமாரகே இதனை தெரிவித்துள்ளார்.

இந்த தொகையானது வாகன இறக்குமதி வரி மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கும் வருமானத்திற்கு சமமானது எனவும் இந்த நிலையில் அரசாங்கத்தின் வாகன வரிக் கொள்கை நகைப்புக்குரியதாக காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை வருடத்திற்கு 10,000 வரை சலுகை வாகன உரிமங்களை வழங்குகிறது.

அவற்றில் பல சொகுசு அல்லது அதி திறன் கொண்ட வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால் அரசாங்கத்திற்கு வருடாந்தம் சுமார் 94 பில்லியன் [illegible] செலவாகும் எனவும் [illegible] தெரிவித்தார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 280 | 250 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 500 |
| தக்காளி | 600 | 500 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 220 | 160 |
| கோவா | 340 | 250 | 320 |
| கரட் | 200 | 300 | 380 |
| பூசணி | 160 | 160 | 160 |
| புடோல் | 250 | 200 | 240 |
| வாழைக்காய் | 80 | 90 | 70 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 240 | 220 | 220 |
| பாகற்காய் | 600 | 400 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 160 |
| கருணைக் கிழங்கு | 150 | 250 | 240 |
| பயற்றங்காய் | 250 | 250 | 240 |
| லீக்ஸ் | 200 | 200 | 280 |
| பீற்றூட் | 360 | 300 | 300 |
| கறிமிளகாய் | 350 | 400 | 320 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 600 |
| போஞ்சி | 600 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 250 |
| கீரை - 1 பிடி | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 500 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 |
| இராசவள்ளி | 160 | 250 | 200 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 500 |
| முள்ளங்கி | 200 | 150 | 240 |
| பொன்னாங்காணி | 60 | 100 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா

# தண்டனை சரியா?



நேற்றைய தொடர்ச்சி)

இம்மாதிரி சோதனைகளில் படிக மணி கறுப்பாகவோ சிவப்பாகவோ, மாறி வந்ததேயொழிய ஒரு முறை கூட மஞ்சளாக மாறியதில்லை. அதனால் எந்தக் குற்றத்திற்கு எது சரியான தண்டனை என்று இந்துவர்மனால் நிர்ணயிக்க முடியவில்லை.

இந்துவர்மன் படிக மணி பற்றி யாரிடமும் கூறவில்லை. அதைக் கொண்டு அவன் இரகசியமாகவே சோதித்து வந்தான். எந்த நீதிபதியும் பண்டிதரும் குற்றத்திற்கு ஏற்ற சரியான தண்டனை கூறவில்லை என்பதை அந்த மணி காட்டியது. ஒரு முறை கூட அது மஞ்சளாக மாறாதது அவனுக்கு ஆச்சரியத்தையே விளைவித்தது. அதனால் நீதி வழங்குவது எவ்வளவு கடினமானது என்பதனை அவன் புரிந்து கொண்டான்.

இந்துவர்மனிடம் படிகமணி எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். ஒரு நாள் அவன் மாறு வேடத்தில் நகரைச் சுற்றி வந்தான். அப்போது ஒரு விசித்திரக் காட்சியைக் கண்டான். ஏழை போலிருந்த ஒருவன் பணக்காரன் போல் இருந்த ஒருவனிடம் ஒரு பண மூடையைக் கொடுத்துக் கொண்டிருந்தான். அந்த ஏழையின் கண்ணீர் ததும்பி வழிந்தது. அதைக் கண்ட இந்துவர்மன் அந்தப் பணக்காரன் ஏழையை ஏமாற்றுகிறான் என நினைத்தான். இந்துவர்மன் அவர்களை அணுகி "இங்கே என்ன நடக்கிறது?" என்று அதட்டிக் கேட்டான். ஏழையும் "இவர் பெரும் பணக்காரர். எனக்கு இவர் உதவ என் சேமிப்பை எல்லாம். இவரிடம் கொடுக்கிறேன்" என்றான். மன்னனும் "நீ இவரிடம் எப்படிப்பட்ட உதவியை எதிர்பார்க்கிறாய்?" என்று கேட்டான்.

ஏழையும் "ஐயா! எனக்கு நான்கு புதல்வர்கள். ஒருநாள் ஒரு யோகி என் வீட்டிற்கு வந்து அவர்களைப் பார்த்துவிட்டு இந்த நால்வரில் ஒருவன் மகா ஞானியாவான் என்றும் அவனுக்கு நல்ல படிப்பு சொல்லிக் கொடு என்றும் கூறினார். ஆனால் அவர்களில் யாருக்கு கல்வி அளிக்க வேண்டும் என்பதைக் கூறாமலே போய் விட்டார். என்னால் நான்கு பேர்களையும் படிக்க வைக்க முடியாது. அதனால் என் மகன்களுள் யார் ஞானி ஆவான் எனக் கண்டு தேர்ந்தெடுக்கும்படி இவரை அணுகினேன்" என்றான். மன்னன் பணக்காரனிடமிருந்து பண மூடையை வாங்கி ஏழையிடம் கொடுத்து "என்னோடு வா. உனக்கு நான் உதவுகிறேன்" எனக் கூறி அவனை அழைத்துக் கொண்டு அவனது குடிசையை அடைந்தான்.

அப்போது அங்கு ஒரு வேடிக்கையான சம்பவம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

ஏழையின் நான்கு புதல்வர்களும் ஒரு மண் பொம்மை செய்து கொண்டிருந்தார்கள். (தொடரும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்

140



"ஆகுவது ஆகும் காலத்து; அழிவதும் அழிந்து சீந்திப்
போகுவது அயலே நின்று போற்றினும் போதல் திண்ணம்
சேகுஅறத் தெளிந்தோர் நின்னில் யார் உளர்? வருத்தம் செய்யாது,
ஏகுதி, எம்மை நோக்கி இரங்கலை என்றும் உள்ளாய்"

என்று கூறி வாழ்த்தி அனுப்பினான்.

'என்றும் உள்ளாய்' என்பது வாழ்த்தாகவும் எள்ளும் நகையாகவும் அமையக் கூறினான் கும்பகர்ணன்.

உடன்பிறப்பு என்னும் பாசத்துக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டு, இராமனை அடைந்தான் வீடணன். "என்ன ஆயிற்று" என்று கேட்ட வினாவுக்கு வீடணன் "உய்திறன் உடையார்க்கு அன்றோ அறவழி ஒழுகும் உள்ளம்? அவன் குட்டையில் ஊறிய மட்டை" என்று அவனைப் பற்றி விமர்சித்து முடித்தான் வீடணன்.

படுகளத்தில் ஒப்பாரி ஏது? சேனைகள் மோதின் அங்கதன், அனுமன், இலக்குவன் எனப் பலரும் கும்பகர்ணனோடு சொற்போரும், மற்போரும், விற்போரும் செய்தனர். சுக்கிரீவனுக்கும் கும்பகர்ணனுக்கும் கடும்போர் நடந்தது. கும்பகர்ணன் சுக்கிரீவனை வான்வழியே தூக்கிச் செல்ல முனைந்தான். அவனைத் தடுக்க இராமன் அம்புகள் விட்டுச் சரகூடம் அமைத்தான்; இராமன் விட்ட அம்பு கும்பகர்ணன் நெற்றியில் பாய்ந்தது; குருதி கொட்டியது; அவன் கைப்பிடி தளர்ந்தது; குருதி சுக்கிரீவன் முகத்தில் பட்டதால், அவன் மயக்கம் தீர்ந்து, கும்பகர்ணனின் மூக்கையும் செவியையும் கடித்து எடுத்துக்கொண்டு வந்து விட்டான்.

தொடர்ந்து நடந்த போரில், இராமன் விட்ட அம்புகளால் கும்பகர்ணன் கைகளும் கால்களும் இழந்து அரை மனிதன் ஆனான். இராமன் அம்புபட்ட வேதனையால் அவனோடு எந்த வம்பும் யாரும் வைத்துக் கொள்ள முடியாது, என்ற முடிவுக்கு வந்தான் கும்பகர்ணன். "இராமன் வில் தொழிலுக்கு ஆயிரம் இராவணர் வந்து எதிர்த்தாலும் சமம் ஆகார்; இனி இராவணன் உயிர் பிழைக்க மாட்டான்" என்ற முடிவுக்கு வந்தான். காலனும் அஞ்சும் கும்பகர்ணனுக்கு முடிவு காலம் நெருங்கியது; உயிர்விடு முன் தம்பிக்கு அருள் செய்யுமாறு இராமனை வேண்டி நின்றான்.

"நீதியால் வந்த நெறி அல்லால் சாதியால் வந்த நெறி அவன் அறியான் என் தம்பி; அவன் உன்னை அடைக்கலமாய் அடைந்திருக்கிறான்; படைக்கலம் உடைய இராவணன் கையில் இவன் அகப்பட்டால்; "உயிர் வேறு உடல் வேறு" என்று ஆக்கி விடுவான்; அவனைக் காப்பது உன் கடமை; இந்த வரத்தை யான் வேண்டுகிறேன்". "மூக்கிலா முகம்" என்று என்னை நோக்கி முனிவர்களும் தேவர்களும் இகழ்வர்; அதனால் என் தலையை உன் அம்பால் அறுத்துக் கடலில் போக்குவாய் என்று கேட்டுக் கொண்டான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி பற்றிப் பேசுவோர் அதிகம்;
அதைச் செய்வோர் மிகக் குறைவு.
– டெனிகஸான்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கட்டுப்படுத்தாத பொலிஸும் ஒரு பொலிஸோ!

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஈழத் தமிழினத்தின் பெரும் சொத்து.

அவர் இயற்றிய பாடல்கள் எக்காலத்தும் நின்று நிலைக்கவல்லவை.

அதிலும் நல்லூர்க் கந்தப்பெருமான் மீது சோமசுந்தரப் புலவர் பாடியருளிய திருப்புகழ் நல்லூர்க் கந்தப் பெருமானின் ஆலயத்தில் பாடப் பெற்று வருகிறதெனில், புலவரின் தமிழ் ஆற்றலும் தெய்வீக ஞானமும் எத்துணை உயர்வானதென்பதை நாம் உணர முடியும்.

தங்கத்தாத்தா என்று எல்லோராலும் போற்றப்படும் சோமசுந்தரப் புலவர் கதிர்காமம் குறித்து பாடிய ஒரு பாடலில்

*கதிரமலை காணாத*
*கண்ணென்ன கண்ணே!*
*கற்பூர ஒளி காணாக்*
*கண்ணென்ன கண்ணே!*

என்று குறித்துரைத்துள்ளார்.

இதை நாம் கூறும்போது என்ன? திடீரென்று சோமசுந்தரப் புலவர் பற்றிய குறிப்புரை என்று நீங்கள் யாரேனும் நினைக்கலாம்.

அவ்வாறு நீங்கள் நினைத்தால், அதற்கு வலுவான விளக்கம் உண்டு.

ஆம், நாட்டின் பொருளாதார நெருக்கடியின் உச்சநிலை எரிபொருள் ஊடாக பொது மக்களை வதைத்து நிற்கிறது.

இதன் அடுத்த கட்டம் உணவுக்கானதாக இருக்கும் என்பது வேறு விடயம்.

இதை நாம் கூறும்போது, பங்கீட்டு முறையை மிக இறுக்கமாகப் பின்பற்றுவதனூடாக மட்டுமே மேற்போந்த நெருக்கடி நிலையைத் தவிர்க்கவும் தணிக்கவும் முடியும்.

அந்த வகையில் எரிபொருள் விநியோகத்தை பங்கீட்டு அடிப்படையில் மேற்கொள்வதும் அத்தியாவசிய சேவைக்கென எரிபொருள் நிலையத்தை தனியாக ஒதுக்கி இருப்பதும் சிறப்பான விடயம்.

அதிலும் பங்கீட்டு முறை சீராக நடைபெற வேண்டுமென்பதில் மாவட்ட – பிரதேச செயலர்களும் அது சார்ந்த உத்தியோகத்தர்களும் கடும் பிரயத்தனம் எடுத்து வருகின்றனர்.

கூடவே களத்தில் நின்று சேவையாற்றுகின்ற பிரதேச செயலர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பான சேவை மனதை நெகிழ வைக்கிறது.

ஆனாலும் அவர்களுக்கு பொலிஸாரின் ஒத்துழைப்புப் போதுமானதாக இல்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதாவது எரிபொருள் நிலையங்களில் போதிய பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவில்லை என்பதுடன் கடமையில் இருக்கின்ற பொலிஸார் தமக்கும் அந்த இடத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதுபோல வேண்டாவெறுப்பாக செயற்படுகின்றனர்.

பொலிஸாரின் இந்த அசமந்தப் போக்கால், ஒழுங்குவரிசைக்குப் புறம்பாக எரிபொருள் நிலையத்தை மோட்டார் சைக்கிள் கூட்டமொன்று சுற்றிவளைத்து நிற்கிறது.

எனினும் அவர்களை அந்த இடத்தில் நின்றும்-அகற்றாமல் பொலிஸார் இருப்பது தான் வேதனைக்குரியது.

இதற்கு மேலாக, எரிபொருள் விநியோகத்துடன் மற்றும் பிரதேச செயலக பணிநிலையுடன் எந்தவகையிலும் தொடர்பில்லாதவர்களும் எரிபொருள் நிலையங்களில் நின்று சுமுகமான நிலைமையைக் குழப்புவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பிலும் பொலிஸார் கவனமற்றவர்களாக இருப்பதுடன் தொலைபேசி உரையாடலுடனேயே பொலிஸாரின் நேரம் கடந்து செல்கிறது.

இங்குதான் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் நினைப்பு வருகிறது.

ஆம், புலவர் இன்றிருந்தால் **கட்டுப்படுத்தாத பொலிஸும் ஒரு பொலிஸோ** என்று நிச்சயம் பாடியிருப்பார்.

## கோப்பாய்க் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்க் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைப் பணியாளர்களுக்கு பெற்றோல் வழங்குவதற்கு வசதியாக ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும் தத்தம் ஆசிரியர்கள், பாடசாலைப் பணியாளர்களின் வாகன விபரங்கள், தேவைப்படும் எரிபொருளின் அளவு ஆகிய தகவல்களை இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய்ப் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ம-7)

## திருக்கேதீச்சர ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வடக்கில் சிறப்பு பேருந்து சேவை

(குப்பிழான்)

வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீச்சர ஆலயத்தில் எதிர்வரும் 03-07-2022 தொடக்கம் 06-07-2022 வரை இடம்பெறவுள்ள மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவின் எண்ணெய்க் காப்பு, கும்பாபிஷேகத்திற்கு அடியவர்களை அழைத்துச் செல்லும் வகையில் தனியார் பேருந்து சேவை நிறுவனமொன்று வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களிலிருந்து போக்குவரத்துச் சேவையை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி குளிரூட்டப்பட்ட சிறப்புப் பேருந்து சேவையைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் 077 545 0343 மற்றும் 077 599 3451 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6-18)

## எரிபொருள் பெற வந்தவர் விபத்தில் சிக்கினார்

(தருமபுரம்)

கிளிநொச்சி இயக்கச்சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக காத்திருந்த முச்சக்கரவண்டியின் சாரதி நேற்று விபத்துக்குள்ளாகியுள்ளார்.

முச்சக்கரவண்டிக்கு எரிபொருளைப் பெறுவதற்காக வடமராட்சி ஆழியவளை பகுதியிலிருந்து இயக்கச்சி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு வந்த வேளை யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கி சுற்றுலாப் பயணிகளைக் கொண்டுசென்ற பேருந்து மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றதுடன் முச்சக்கரவண்டியின் சாரதி பலத்த காயங்களுக்குள்ளானார்.

முச்சக்கரவண்டியின் சாரதி பளை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-316)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த. மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை 26 ஆம் திகதி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**மன்னார் பிரதேசத்தில்** இ.சி.பி. (சிலாவத்துறை), சிலாவத்துறை கடற்படை முகாம், செம்மண்தீவு நீழ்வழாங்கல் சபை, நீர்வழாங்கல் முருங்கன், லைவ்ஸ்டார்க் ப்ரீடர்ஸ்கோப் சொசைட்டி-செம்மண்தீவு, அகத்தி முறிப்பு, அகத்தி முறிப்புத் திட்டம், அளவக்கை சிறுகுளம் திட்டம், அரிப்பு, அரிப்பு நீர் வழாங்கல், ஆத்திமோட்டை, ஆத்திக்குழி, செம்மண்தீவு, இலந்தைமோட்டை, ஹனைஸ் நகர், கரடிக்குழி, காயக்குழித்திட்டம், கொக்குப்படை, கொண்டச்சித் திட்டம், கொண்டச்சி நீர்வழாங்கல் சபை, கொண்டச்சி சிங்கள கிராமம், கூழாங்குளம், கூழாங்குளத் திட்டம், (ஜுநாத் நகர்), மடுக்கரை, மணற்குளம், மறிச்சிக்கட்டி, மருதமடு, மாதோட்டம், மேதென்வெளி, முள்ளிக்குளம், முருங்கன், முசலி தேசிய பாடசாலையடி, பெரிய பொள்ளாச்சி பொற்கேணி, பாலைக்குழி, பாலைக்குழித்திட்டம், பரப்பாங்கண்டல், பரிகாரிக் கண்டல், பெரிய பொள்ளாச்சி பொற்கேணி (பண்டாரவெளி), பிச்சைக்குளம், பிச்சை வாணிபங்குளத்திட்டம், பொன் தீவுக் கண்டல், கள்ளிமோட்டை புளியங்குளம், பொன்னாச்சிக்குளம், புதுக்காமம் கிராமம், புதுக்குடியிருப்பு (சிலாவத்துறை), புதுவெளி, சின்னப் பொள்ளாச்சி பொற்கேணித்திட்டம், சிலாவத்துறை, சூரியகட்டைக்காடு, சின்ன பொள்ளாச்சி பொற்கேணி, தம்பட்ட முசலி, உயிர்த்தராசங்குளம், வெள்ளிமலை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### மகிழ்ச்சியாக இருப்பதற்கு மிக எளிய வழி

- நிமிர்ந்து அமருங்கள். அதன்பின்னர் முதலில் ஒரு புனித எண்ணத்தை எல்லா உயிரினங்களின் மீதும் செலுத்துங்கள். எல்லோரும் இன்பம் பெறுக, எல்லோரும் அமைதி பெறுக, எல்லோரும் ஆனந்தம் பெறுக என்று மனதில் திரும்பத் திரும்பக் கூறுங்கள். அனைத்து திசைகளிலும் அவ்வாறு செய்யுங்கள்.
- இவ்வாறு எவ்வளவுக்கு எவ்வளவு அதிகம் செய்கிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு நீங்களும் நன்மையை உணர்வீர்கள். நம்மை ஆரோக்கியமாக வைத்திருக்க மிகவும் எளிய வழி பிறருடைய ஆரோக்கியத்தைக் கவனித்துக் கொள்வதே. நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கு மிக எளிய வழி பிறரை மகிழ்ச்சி அடையச் செய்வதே என்பதை நாளடைவில் அறிந்து கொள்வீர்கள்.
- அதன் பிறகு கடவுளிடம் நம்பிக்கை உடையவர்கள் பிரார்த்தனை செய்யுங்கள். பிற பிரார்த்தனை எல்லாம் சுயநலம் தான். பின்னர் உங்கள் உடம்பை நினைத்து அது நலமாக, உறுதியாக இருப்பதாக எண்ணுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 16

**யூத இனப் படுகொலைகள்**
(The holocaust) (1941-1945)

1938 - 1945 வரை, நாஜிக்கள் இருபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் படையெடுத்து ஆக்கிரமித்திருந்த னர். அதில் ஒரு நாடு உக்ரைன். 1940 இல் உக்ரைன் சோவியத் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் ஒரு குடியரசாக இருந்தது. இது ஒரு பெரிய யூத மக்களைக் கொண்டி ருந்தது. அண்ணளவாக 2,700, 000 யூதர்கள் இருந்தார்கள்.

ஜூன் 1941 இல், ஆபரேஷன் பார்பரோசா (Operation Barbar ossa) தொடங்கப்பட்டதைத் தொட ர்ந்து, உக்ரைன் பிரதேசம் நாஜி ஜேர்மனியால் விரைவாக ஆக்கிர மிக்கப்பட்டது. இப் பிரதேசம் 20 ஒகஸ்ட் 1941 இல் ரீச்கோமிசரியாட் உக்ரைன் (Reichkommissariat Ukraine) என்று முறையாக அறி விக்கப்பட்டது. எரிச் கோச் (Erich Koch) இப் பிராந்தியத்தின் ரீச்கோமிசார் (Reichkommissar) என்றழைக்கப்பட்ட தலைவராக பதவியேற்றார்.

இருபது வருட சோவியத் ஆட்சி யின் பின்னர், 1932-1933 பஞ்சம் மற்றும் பயங்கரம், நாஜிக்கள் தமது நாட்டிற்கு பொருளாதார மறுமலர்ச் சியைக் கொண்டு வருவார்கள் என்று உக்ரைனில் பலர் நம்பினர்.

உக்ரைனிய யூத மக்களைப் பொருத்தவரையில் அவர்கள் ஜேர்மனியிலும் அதற்கு அப்பாலும் தங்கள் சமூகத்தின் மீது நாஜிகளின் துன்புறுத்தலின் அறிக்கைகளைக் கேட்டு அச்சமடைந்தனர். பல உக்ரைனிய யூதர்கள் முன்னேறும் நாஜி இராணுவத்திடம் பிடிபடாமல் தப்பி ஓட முயன்றனர். இருப்பினும், அவ்வாறு தப்புவதற்கு போக்கு வரத்து மற்றும் ஏனைய வசதிகள் இல்லாததால் தப்பிப்பது கடினமாக இருந்தது.

அடால்ஃப் ஹிட்லர் ஒக்டோபர் 1941 இல் ஒரு உரையில் உக்ரைன் நாட்டிற்கான தனது நோக்கங்களை அறிவித்தார். "இருபது ஆண்டுக ளில் உக்ரைன் ஏற்கனவே பூர்வீக வாசிகளைத் தவிர மற்றைய இரு பது மில்லியன் மக்களுக்கு ஒரு தாயகமாக மாறிவிட்டது.

முந்நூறு ஆண்டுகளில், உல கின் அழகான தோட்டங்களில் ஒன்றாக உக்ரைன் நாடு மாறும். பூர்வீக குடிமக்களைப் பொறுத்த வரை, நாங்கள் அவர்களை கவ னமாக அடையாளம் காண வேண்டும். பூர்வீக மக்களை அழிப்பவனான யூதர்களை விரட் டியடிப்போம்" இவ்வாறு கூறினார்.

பொதுவாகக் கூறின் சோவியத் ஒன்றியத்தின் மீதான படையெடுப்பு இராணுவத் தாக்குதலாக மட்டு மன்றி கருத்தியல் ரீதியாகவும் பார்க்கப்பட்டது. நாஜிகளின் பிர சாரத்தில் சோவியத் யூனியனானது தமது இறுதி எதிரி என்றும், கம்யூ னிசம் மற்றும் யூதர்களின் தாயகம் என்றும் சித்திரிக்கப்பட்டது. இந்த அணுகுமுறை ஆக்கிரமிக்கப்பட்ட உக்ரைனில் நாஜிக்கள் மேற் கொண்ட நடவடிக்கைகளில் பிரதிப லித்தது.

ஆரம்பத்திலிருந்தே யூதர்க ளுக்கு எதிரான பிரசாரம் தூண் டப்பட்டது. உக்ரைன் படையெடுப் பைத் தொடர்ந்து நடந்த குண்டுவீச்சு பிரசாரத்தின் போது, உக்ரைனிய மாநகரங்கள் மற்றும் நகரங்கள் மீது துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன. இவ்வாறு நாஜிகள் சோவியத் இராணுவ வீரர்களை சரணடையச் செய்வதை நோக்கமாகக் கொண்டி ருந்தனர்.


மேலும் அவர்கள் மிகவும் யூத விரோதிகளாகவும் இருந்தனர். உண்மையான எதிரிகள் கம்யூனிச யூதர்கள் என்பதால், படையெடுக்கும் ஜேர்மனியர்களைப் பற்றி நீங்கள் பயப்படுவதற்கு எந்தக் காரணமும் இல்லை என்று துண்டுப்பிரசுரங்க ளில் குறிப்பிடப்பட்டிருந்தது.



அடால்ஃப் ஹிட்லர்

நாஜிகள் ஆக்கிரமித்த சிறிது காலத்திற்குப் பிறகு, யூத மக்களை, யூத குடியிருப்புகள் மற்றும் சேரி களில் (ghettos) கட்டாயப்படுத்தி இருக்கச் செய்து தங்களின் மேற் பார்வையின் கீழ் வைத்திருந்தனர். இது ஒரு தற்காலிக நடவடிக்கையா கும்.

உக்ரைனிய யூதர்கள் சேரிக ளுக்குள் (ghettos) தள்ளப்பட்ட உடனேயே ஜேர்மன் இராணுவம், உக்ரைனிய பொலிஸ் மற்றும் உள் ளூர் ஒத்துழைப்பாளர்கள் ஆகி யோர் அவர்களைப் படுகொலை செய்யத் தொடங்கினர்.



மிசோக் கெட்டோவில் (Mizocz ghetto) (உக்ரேனிய உதவியாளர்களின் உதவியுடன்) யூதப் பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு மரணதண்டனையை எதிர்பார்த்து வரிசையில் காத்திருக்கிறார்கள்

போலந்தில் முகாம்களில் வைத் திருந்தது போலல்லாமல், உக்ரை னில் ஜேர்மன் இராணுவத்தி லிருந்த Einsatzgruppen என்கின்ற துணை இராணுவப் படையினரால் யூதர்கள் அவர்களது சொந்த நகரங்களில் அல்லது அத ற்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட் டனர். இது holocaust என்று அழைக்கப்பட்ட படுகொலைகள் ஆகும்.

உள்ளூர் மக்கள் பொதுவாக என்ன நடக்கிறது என்பதைப் பற்றி அறிந்திருந்தனர், மேலும் பல சந்தர்ப்பங்களில் அவர்கள் கொலை களைச் செய்வதற்கு நாஜிகளுக்கு உதவினார்கள் என்றும் கூறப்படு



உக்ரேனிய யூதரின் மரணதண்டனை

கிறது. துணை இராணுவப் படை யினர் ஆரம்பத்தில் உடனடி அச்சு றுத்தலாகக் கருதப்பட்ட 17-45 வயதுடைய யூத ஆண்களைக் குறிவைத்து கொலை செய்தார்கள்.

மீதமுள்ள யூத மக்கள் (ஆண் கள், பெண்கள் மற்றும் குழந்தை கள்) சேரிகளுக்கு அல்லது குறிப் பிட்ட பகுதிகளுக்கு கட்டாயப்படுத்தி அனுப்பப்பட்டு பின்னர் அடுத்தடுத்த நாட்கள் மற்றும் வாரங்களில் அங்கிருந்து அணிவகுத்து அழைத் துச் செல்லப்பட்டு நகரத்தின் எல் லைக்கு கொண்டு செல்லப்பட்டு, சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இது மட்டுமல்ல பாதிக்கப்பட்டவர்கள்

தங்கள் கல்லறைகளைத் தாங்களே தோண்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சைத்தோமிர் (Zhytomy) நகரில், 1941 கோடை யில் இருந்து 1943 இலையுதிர் காலம் வரையிலான இரண்டு ஆண்டுகளில் 180,000 யூதர்கள் இவ்வாறு கொல்லப்பட்டனர்.

1941 செப்டெம்பர் 29 மற்றும் 30 திகதிகளில், தலைநகர் கீவ்வில், பாபியார் (Babi Yar) படுகொலை நடந்தது. அந்த இரண்டு நாட்களில், 33,771 யூதர்கள் பாபி யார் பள்ளத் தாக்கில் உக்ரைன் காவல்துறை மற்றும் Einsatzgruppe எனப் படும் துணை இராணுவப் படை யினர் ஆகியோரால் படுகொலை



அக்டோபர் 16, 1941 அன்று மரண தண்டனைக்காக கூடியிருந்த யூதர்களின் ஒரு பெரிய குழுவில் ஒரு இளம் தாயும் அவரது இரண்டு குழந்தைகளும் அமர்ந்துள்ளனர்.

செய்யப்பட்டனர். இந்த படுகொலை யானது நாஜிக்களும் அவர்களது ஒத்துழைப்பாளர்களும் நடத்திய மிகப் பெரிய ஒற்றைப் படுகொலை களில் ஒன்றாகும்.

இந்த வகையான வெகுஜனக் கொலைகள், தன்னிச்சையான கொலைகள், பொதுத் தூக்குகள் மற்றும் அடித்தல்கள் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் ஆகிய வற்றுடன் நடந்தன. இவ்வாறு அங்கு பல உள்ளூர் நாஜிக்கள் வெகுஜனக் கொலைகளைச் செய் வதற்கான மிகச் சிறந்த வழிகளை கையாண்டனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள் பங்...

அரச திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் பங்கீட்டு அட்டை அந்தந்த திணைக்களத் தலைவர்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை இவ் எரிபொருளுக்கான பங்கீட்டு விநியோக அட்டையை பெற்றுக் கொள்ளாத அரச திணைக்களங்கள் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் அறிவுறுத்தியுள்ளார். (ம-3,7,18)

## எரிபொருள்...

மேலும் தாமதமடையக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாட்டை வந்தடையவிருந்த குறித்த கப்பல் நேற்று இலங்கையை வந்தடையவுள்ளதாக வழங்குநர்களால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு ஏற்கெனவே உறுதியளிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், கப்பலின் வருகை மேலும் தாமதமடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாமதத்திற்கு பொதுமக்களிடம் மன்னிப்புக் கோருவதாக எரிசக்தி அமைச்சர் டுவிட்டர் பதிவொன்றை மேற்கொண்டு தெரிவித்துள்ளார். (ம-7)

## இளம் குடும்பஸ்...

தந்தையான 30 வயதுடைய சிவலோகேஸ்வரன் மதுரகன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று அதிகாலை 2 மணியளவில் வீட்டு முற்றத்தில் உள்ள மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## காங்கேசன்துறை...

நகைகள் கொள்ளையடிக்கப் படாத நிலையில் காணப்படுவதனால் கொலைக்கான கர்ரணம் கண்டறியப் படவில்லை என காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூதாட்டியின் வீட்டு வளாகத்தில் அமைந்துள்ள தோட்டத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை காலை தண்ணீர் இறைப்பதற்குச் சென்ற உறவினர் ஒருவர் மூதாட்டி குருதிக் காயங்களுடன் சடலமாக காணப்பட்டதை அறிந்து காங்கேசன்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,18,33)

## நிபந்தனை...

நிதிகள் ஜனாதிபதி கோட்டாவிடம் தெரிவித்துள்ள்னர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்காக நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

நேற்று பிற்பகல் கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கு இணங்க இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு உதவ எதிர்பார்த்துள்ளதாக பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

ஒரு வார காலம் இலங்கையில் தங்கியிருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு, ஊழியர்கள் மட்ட உடன்படிக்கையை எட்டுவது தொடர்பான கொள்கை அடிப்படையிலான விடயங்கள் குறித்து நீண்ட ஆய்வை மேற்கொண்டு வருகின்றது.

இதன்படி பிரதமர், நிதியமைச்சு, மத்திய வங்கி உள்ளிட்ட பொருளாதார அதிகாரிகள் மற்றும் நிபுணர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியதுடன் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளனர். (ம-7)

## காணாமலாக்கப்...

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள நீதியமைச்சர் யாழில் சில நாட்கள் தங்கியிருந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

குறிப்பாக காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் சில செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளேன் என தெரிவித்தார்.

மேலும் நேற்று மாலை நல்லூர் கந்தசுவாமி கோவிலிலும் வழிபாடுகளை மேற்கொண்டார். (ம-7,33)

## 600 லீற்றர்...

வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

மானிப்பாய் சோதிவேம்படி பாடசாலைக்கு அண்மையாக உள்ள வீடொன்றில் நேற்றிரவு இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

53 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டார். (ம-7,33)

## இலங்கையை...

ஐரோப்பிய பிராந்திய நாடுகளின் தூதுவர்கள் நேற்று முற்பகல் கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான எதிர்கால திட்டங்கள்தொடர்பில் வழங்கப்படும் உறுதியான செய்தியுடன் சர்வதேச சமூகம் இலங்கைக்கு இலகுவாக உதவ முடியும்என தூதுக் குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்நாட்டின் சனத்தொகையில் 90 சதவீதமானவர்கள் கிராமப் புறங்களில் வாழ்வதோடு, அதில் 75 சதவீதமானவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான உரம் மற்றும் எரிபொருளை வழங்குவதன் மூலம் உணவு விநியோகம் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என ஜனாதிப்தி தெரிவித்தார்.

காணி பிரச்சினைக்கு தீர்வாக விவசாயத்தில் ஆர்வம் உள்ளவர்களுக்கு விவசாயம் செய்யப்படாத அரசகாணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள மனிதாபிமான சூழ்நிலையை கருத்திற் கொண்டு நிரந்தர தீர்வு வழங்குவதற்கும் சட்டத்தை அமுல்படுத்தும்போது ஒருபோதும் [illegible] பேதமின்றி நியாயமாக நடந்துகொண்ட விதம் பற்றியும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். (ம-7)

## மனித உரிமை...

பிரிட்டிஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர், சர்வதேச நாணய நிதியத்தின் பிரிவுகள் பொருளாதார கொள்கைகள் தொடர்பாக நிபந்தனைகளை விதிப்பதற்கு அனுமதிக்கின்ற போதிலும் அரசியல் அல்லது மனித உரிமை தொடர்பான நிபந்தனைகளை விதிப்பதற்கான ஏற்பாடுகள் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், சர்வதேச கடன் மன்றங்களின் ஏனைய உறுப்பினர்களுடன் இணைந்து இலங்கையின் கடன் பிரச்சினைக்கு தீர்வொன்றை காண முயல்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக இலங்கை அரசாங்கத்துடனும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களுடனும் பேச்சுக்களை நடத்துவோம் என்றும் யுத்தத்திற்கு பிந்திய பொறுப்புக்கூறல் விவகாரம் தொடர்பாக பிரித்தானியா உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு, ஐ.நா. மனித உரிமை பேரவையின் தீர்மானம் குறித்து இலங்கை ஆக்கபூர்வமான ஈடுபாட்டை காண்பிக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

தன நிதானய
திகதி - 2022.06.24
சீட்டிழுப்பு இலக்கம் - 826
Y 18 22 49 71

மஹஜன சம்பத
திகதி 2022/06/24
சீட்டிழுப்பு இலக்கம் 4796
G 5 3 5 3 4 5
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.24
சீட்டிழுப்பு இலக்கம் 105
மகரம் 06 25 27 39 மகரம்

மெகா பவர்
திகதி 24/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1144
F 01 19 24 47 65

கொவிசெத
திகதி 2022.06.24
சீட்டிழுப்பு இலக்கம் 3038
E 01 17 47 56
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1274
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 3 9 1 4 4 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1771
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.06.24
தினம் வெள்ளிக்கிழமை
T 04 06 48 72
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,383,220/-

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.06.24
சீட்டிழுப்பு இல : 3932
வர்ணம் : செம்மஞ்சள்
ரூ. 3,967,040/-
வெற்றி இலக்கங்கள் 05 34 68 72 L

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 187
சீட்டிழுப்பு திகதி 2022.06.24
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 31 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,680,940/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,409,348/-
திகதி 2022-06-24
வெற்றி வாரம் 3483
வெற்றி இலக்கங்கள் 11 24 29 45
சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,255,620/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 07 23 24 62 65
சீட்டிழுப்பு வாரம் 947
2022.06.24
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 244,412,431/-
தொலை பேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1597
சீட்டிழுப்பு திகதி : 2022.06.24
ரூ. 4,171,360/-
வெற்றி இலக்கங்கள் 44 63 70 76 H

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் மாணவிகள் பலர் பாலியல் துஷ்பிரயோகம் ஆசிரியர், மாணவர்கள் கைது

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை மாணவிகள் பலர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ஆசிரியர் ஒருவரும் மாணவர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில், ஆசிரியரும் மாணவர் ஒருவரும் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் சுமார் பதினேழு, பதினெட்டு வயதை உடைய ஆறு மாணவர்களையும் நீதிமன்றத்தில் பொலிஸார் முன்னிலைப்படுத்தியுள்ளனர்.

இதன்போதே, மாணவர் ஒருவர் எதிர்வரும் 30.6.2022 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதோடு ஏனைய ஐந்து மாணவர்களுக்கும் நீதிமன்றில் பிணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் பலரை தேடி பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்பிக்கின்ற ஆசிரியர் மற்றும் மாணவர்கள் இணைந்து பல பாடசாலை மாணவிகளை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதோடு பாலியல் சேட்டை புரிந்து பாலியல் துஷ்பிரயோகத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

ஆசிரியர், அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக நியமிக்கப்பட்டு ஆசிரியர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த நிலையில், குறித்த ஆசிரியர் மற்றும் மாணவர்கள் சிலர் இணைந்து மாணவிகள் பலரின் நிர்வாண புகைப்படங்களை வைத்து அச்சுறுத்தி அவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன. (ம-7)

## மின்சாரம்...

தந்தை உயிரிழந்துள்ளார்.

யாழ்.நகர் பகுதியில் நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் சதிஷ் (வயது-35) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் வீட்டில் பணி புரிந்து கொண்டிருந்தபோதே மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ம-7)


## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

- பகல், இரவுக் கடமை
- ஆண்கள்

யாழ். நகரை அண்மித்தவர்களுக்கு முன்னுரிமை.

076 097 3121 (இ)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழிச் சந்திக்கு அருகாமையில் 112 பரப்புக் காணி விற்பனைக்கு.

- A9 வீதியில் இருந்து 250 m தூரத்தில்
- நாவற்குழி சந்தியில் இருந்து 300 m தூரம்
- நல்ல இயற்கை சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 18 அடிப்பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை நான்கு இலட்சம் ரூபாய்
- பின் பகுதி காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் ரூபாய்

(11972)

பார்வையிடும் நேரம்
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்பு:- 074 291 3726, 074 291 3727

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A9 வீதியில் இருந்து 50 m தூரத்தில் (இரண்டாவது காணி)
- நல்ல சூழல், நல்ல தண்ணீர் நிலம்
- 20 அடி பாதையுடன்
- கைதடிச் சந்தியில் இருந்து 300 m தூரத்தில்

(11972)

பார்வையிடும் நேரம்
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்பு:- 076 658 3621, 077 259 0391

## Dimo வாகனம் வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம் – கிளிநொச்சிக்கு சென்று வருவதற்கு டிமோ பட்டா வாகனம் வாடகைக்கு தேவை. (இ)

தொடர்பு 076 097 3121

## உங்கள் எதிர்கால கனவிற்கான உடனடி வேலை வாய்ப்புக்கள்



யாழ்ப்பாணம் · கிளிநொச்சி · மன்னார் · வவுனியா

வயதெல்லை - 18 - 30
கல்வித் தகைமை - G.C.E O/L அல்லது G.C.E A/L கற்றிருத்தல்
வருமானம் - 18,000/= - 45,000/=

- திறமையானவர்கள் நேர்முகத்தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவர்.
- நேர்முகத்தேர்வு உங்கள் பிரதேசத்திலேயே நடைபெறும்.
- முற்பதிவுகளுக்காக இன்றே உங்களது

முழுப்பெயர், முகவரி, தே.அ.அ.இல என்பவற்றை SMS மூலமாகவோ Viber, Whatsapp மூலமாகவோ எமக்கு அனுப்பி வையுங்கள்.

Inner circle srilanka

Inner Circle (11977) 076 770 7759

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் A9 வீதி முகப்புடன் 27 பரப்புக் காணி விற்பனைக்கு.

- A9 வீதி முகப்பாக கொண்டது.
- 04 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- வர்த்தக நிலையங்கள், திருமண மண்டபங்கள், களஞ்சியசாலைகள், வாகன காட்சியறைகள் அமைக்க உகந்த பகுதி.
- நாவற்குழிச் சந்தியில் இருந்து 300 M தூரத்தில்

(11972)

பார்வையிடும் நேரம்
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்பு:- 074 269 0854, 076 261 1282

## கனடா/ UK மாணவர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசா

(C-4539)

((((((((விசேடமாக))))))))

அரசபணி உத்தியோகத்தினர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு சம்பந்தமான இலவச வழிகாட்டல்.

மேலதிக தகவல்களுக்கு:
WORLD EDUCATION CONSULTANCY
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
0779265447, 02 17200989
கிளை: சங்கத்தானை, சாவகச்சேரி

## பழுது பார்த்தல் (கணனி/ மின்சாரம்)

யாழ். நகரிற்குட்பட்ட பகுதியிலுள்ள வீடுகள், அலுவலகங்களுக்கு நேரடியாக வருகை தந்து கணனி, மின் இணைப்புக்கள் பழுது பார்க்கப்படும். (நிபந்தனைக்குட்பட்டது.)

சென் அன்ரனிஸ் (யாழ்.நகர்)

077 063 3408
021 222 4865

(C-4537)

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

(C-4121)

V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



- சம்பளம் - 25000 /= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-4121)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## Win Repair

குளிர்சாதனப் பெட்டி பழுதடைந்துவிட்டதா? கவலையை விடுங்கள். வீட்டிற்கே வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கின்றோம்.

(11975)

077 964 8942


## மரண அறிவித்தல்

திருமதி

### வேலாயுதபிள்ளை கமலாம்பிகை



கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதபிள்ளை கமலாம்பிகை அவர்கள் நேற்று (24.06.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*தகவல்:* குடும்பத்தினர்
021 205 2005
வே.கருணாகரன் (மகன்) (11974)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.